(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 53.]**

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2025 மே 21, புதன்கிழமை மு.ப. 9.30 மணிக்கு

## சமூகமளித்தோர்:

**கௌரவ (டாக்டர்) ஜகத் விக்கிரமரத்ன,** சபாநாயகர்

**கௌரவ (டாக்டர்) ரிஸ்வி சாலி**, பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

---

**கௌரவ கலாநிதி ஹரினி அமரசூரிய,** பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்

**கௌரவ (பேராசிரியர்) ஏ.எச்.எம்.எச். அபயரத்ன,** பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) கிரிஷாந்த அபேசேன,** விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சர்

**கௌரவ அனுர கருணாதிலக்க,** நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சர்

**கௌரவ சுனில் குமார கமகே,** இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்

**கௌரவ ராமலிங்கம் சந்திரசேகர்,** கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர்

**கௌரவ குமார ஜயகொடி,** வலுசக்தி அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி ஹர்ஷன நானாயக்கார,** நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) தம்மிக பட்டபெந்தி,** சுற்றாடல் அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) உபாலி பன்னிலகே,** கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சர்

**கௌரவ பிமல் ரத்நாயக்க,** போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் மற்றும் பாராளுமன்றச் சபை முதல்வர்

**கௌரவ ஆனந்த விஜேபால,** பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ கே.வி. சமந்த வித்யாரத்ன,** பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர்

**கௌரவ வசந்த சமரசிங்க,** வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) ஹினிதும சுனில் செனெவி,** புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ சஜித் பிரேமதாச,** பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

**கௌரவ ஜனித ருவன் கொடித்துவக்கு,** துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் பிரதி அமைச்சர்

**கௌரவ ரத்ன கமகே,** கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ எரங்க குணசேகர,** இளைஞர் விவகாரங்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) பிரசன்ன குணசேன,** போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர்

**கௌரவ எண்டன் ஜயகொடி,** சுற்றாடல் பிரதி அமைச்சர்

**கௌரவ ஆர்.எம். ஜயவர்தன,** வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு பிரதி அமைச்சர்

**கௌரவ மஹிந்த ஜயசிங்ஹ,** தொழில் பிரதி அமைச்சர்

**கௌரவ கமகெதர திசாநாயக்க,** புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ வசந்த பியதிஸ்ஸ,** கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை பிரதி அமைச்சர்

**கௌரவ சுந்தரலிங்கம் பிரதீப்,** பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் பிரதி அமைச்சர்

**கௌரவ முனீர் முலாபர்,** தேசிய ஒருமைப்பாட்டு பிரதி அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி சுனில் வடகல,** பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) ஹங்சக விஜேமுணி,** சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக பிரதி அமைச்சர்

**கௌரவ உபாலி சமரசிங்ஹ,** கூட்டுறவு அபிவிருத்தி பிரதி அமைச்சர்

**கௌரவ ரீ. பீ. சரத்,** வீடமைப்பு பிரதி அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) நாமல் சுதர்சன,** மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) ஹர்ஷண சூரியப்பெரும,** நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சர்

**கௌரவ அருண் ஹேமச்சந்திரா,** வெளிநாட்டலுவல்கள் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சர்

---

**கௌரவ அஜித் அகலகட**

**கௌரவ அபூபக்கர் ஆதம்பாவா**

**கௌரவ (திருமதி) சட்டத்தரணி சாகரிகா அதாவுத**

**கௌரவ ஹெக்டர் அப்புஹாமி**

**கௌரவ (டாக்டர்) நிஹால் அபேசிங்ஹ**

**கௌரவ (டாக்டர்) இராமநாதன் அர்ச்சுனா**

**கௌரவ ஜே.சீ. அலவத்துவல**

**கௌரவ எம்.கே. எம். அஸ்லம்**

**கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி**

**கௌரவ லக்ஸ்மன் நிபுண ஆரச்சி**

**கௌரவ மஞ்ஜுள சுரவீர ஆரச்சி**

கௌரவ (கலாநிதி) (செல்வி) கௌஷல்யா ஆரியரத்ன

கௌரவ பீ. ஆரியவங்ஷ

கௌரவ (டாக்டர்) நஜீத் இந்திக்க

கௌரவ கே.இளங்குமரன்

கௌரவ எம்.எஸ். உதுமாலெப்பை

கௌரவ (திருமதி) ஒஷானி உமங்கா

கௌரவ கயந்த கருணாதிலக்க

கௌரவ ரவி கருணாநாயக்க

கௌரவ (செல்வி) கிருஷ்ணன் கலைச்செல்வி

கௌரவ சனாதிபதி சட்டத்தரணி எம். நிசாம் காரியப்பர்

கௌரவ உபுல் கித்சிறி

கௌரவ (திருமதி) சட்டத்தரணி சமிந்திரானி கிரிஎல்லே

கௌரவ கதிரவேலு சண்முகம் குகதாசன்

கௌரவ வசந்த புஷ்ப குமார

கௌரவ சமிந்த லலித் குமார

கௌரவ சட்டத்தரணி சரத் குமார

கௌரவ (திருமதி) சட்டத்தரணி நிலந்தி கொட்டஹச்சி

கௌரவ கவீந்திரன் கோடீஸ்வரன்

கௌரவ லசித் பாஷண கமகே

கௌரவ திலங்க யூ. கமகே

கௌரவ (திருமதி) நிலூஷா லக்மாலி கமகே

கௌரவ சதுர கலப்பத்தி

கௌரவ நிஹால் கலப்பத்தி

கௌரவ அஜித் கிஹான்

கௌரவ (டாக்டர்) ஜகத் குணவர்தன

கௌரவ (திருமதி) சமன்மலீ குணசிங்ஹ

கௌரவ அசோக குணசேன

கௌரவ டி.வீ. சானக

கௌரவ கயான் ஜனக

கௌரவ ருவன்திலக்க ஜயகொடி

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன

கௌரவ திலித் ஜயவீர

கௌரவ (திருமதி) சட்டத்தரணி துஷாரி ஜயசிங்ஹ

கௌரவ ரீ.கே. ஜயசுந்தர

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர

கௌரவ மயில்வாகனம் ஜெகதீஸ்வரன்

கௌரவ றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி

கௌரவ எம். ஏ. எம். தாஹிர்

கௌரவ (டாக்டர்) செல்லத்தம்பி திலகநாதன்

கௌரவ (திருமதி) சட்டத்தரணி அனுஸ்கா திலகரத்ன

கௌரவ சந்தன தென்னகோன்

கௌரவ ஜீவன் தொண்டமான்

கௌரவ சாமர சம்பத் தசனாயக

கௌரவ சுகத் வசந்த த சில்வா

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா

கௌரவ தனுர திசாநாயக

கௌரவ தர்மப்பிரிய திசாநாயக்க

கௌரவ சுஜீவ திசாநாயக்க

கௌரவ சட்டத்தரணி சுசந்த தொடாவத்த

கௌரவ டப்ளியூ.எச்.எம். தர்மசேன

கௌரவ சுசந்த குமார நவரத்ன

கௌரவ (பேராசிரியர்) சேன நாணாயக்கார

கௌரவ கிங்ஸ் நெல்சன்

கௌரவ நந்தன பத்மகுமார

கௌரவ நிமல் பலிஹேன

கௌரவ நிஷாந்த பெரேரா

கௌரவ அஜித் பி. பெரேரா

கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா

கௌரவ ஜீ.ஜீ. பொன்னம்பலம்

கௌரவ சட்டத்தரணி சித்ரால் பெர்னாந்து

கௌரவ கந்தசாமி பிரபு

கௌரவ ரோஹண பண்டார

கௌரவ நந்த பண்டார

கௌரவ பத்மசிரி பண்டார

கௌரவ ரவீந்திர பண்டார

கௌரவ றிஸாட் பதியுதீன்

கௌரவ சுதத் பலகல்ல

கௌரவ (டாக்டர்) எஸ். ஶ்ரீ பவானந்தராஜா

கௌரவ ஈ.எம். பஸ்நாயக

கௌரவ விஜேசிரி பஸ்நாயக்க

கௌரவ சுனில் பியன்வில

கௌரவ லெப்டினன் கமாண்டர் (ஓய்வுபெற்ற) பிரகீத் மதுரங்க

கௌரவ ஜகத் மனுவர்ண

கௌரவ எஸ்.எம். மரிக்கார்

கௌரவ கே.காதர் மஸ்தான்

கௌரவ இம்ரான் மகரூப்

கௌரவ சானக மாதுகொட

கௌரவ ருவன் மாபலகம

கௌரவ (கலாநிதி) நந்தன மில்லகல

கௌரவ இஸ்மாயில் முத்து மொஹம்மட்

கௌரவ தனுஷ்க ரங்கனாத்

கௌரவ சஞ்ஜீவ ரணசிங்ஹ

கௌரவ ஆர்.எம். சமந்த ரனசிங்ஹ

கௌரவ சுனில் ரத்னசிரி

கௌரவ ஆர்.எம். காமிணி ரத்நாயக்க

கௌரவ மஞ்சுல சுகத் ரத்னாயக

கௌரவ சுரங்க ரத்நாயக்க

கௌரவ (திருமதி) ஏ.எம்.எம்.எம். ரத்வத்தே

கௌரவ அசோக சபுமல் ரன்வல

கௌரவ துரைராசா ரவிகரன்

கௌரவ முஜிபுர் ரஹுமான்

கௌரவ ஹர்ஷன ராஜகருணா

கௌரவ மனோஜ் ராஜபக்ஷ

கௌரவ சுனில் றாஜபக்ஷ

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்

கௌரவ வருண லியனகே

கௌரவ (திருமதி) சட்டத்தரணி ஹசாரா லியனகே

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன

கௌரவ ஆர்.ஜீ. விஜேரத்ன

கௌரவ சட்டத்தரணி பிரியந்த விஜேரத்ன

கௌரவ தர்மப்ரிய விஜேசிங்ஹ

கௌரவ (திருமதி) சட்டத்தரணி ஹிருனி விஜேசிங்ஹ

கௌரவ அசித நிரோஷண எகொட வித்தான

கௌரவ திலிப் வெதஆரச்சி

கௌரவ அதுல வெலதகொட

கௌரவ சிவஞானம் சிறீதரன்

கௌரவ (டாக்டர்) பத்மநாதன் சத்தியலிங்கம்

கௌரவ திலிண சமரகோன்

**கௌரவ (டாக்டர்) நிஷாந்த சமரவீர**

**கௌரவ (செல்வி) அம்பிகா சாமிவெல்**

**கௌரவ (டாக்டர்) இளையதம்பி சிறிநாத்**

**கௌரவ ஷாந்த பத்ம குமார சுபசிங்ஹ**

**கௌரவ தேவானந்த சுரவீர**

**கௌரவ சந்தன சூரியஆரச்சி**

**கௌரவ மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) ஜீ.டி.சூரியபண்டார**

**கௌரவ கிட்ணன் செல்வராஜ்**

**கௌரவ சட்டத்தரணி ரஊப் ஹகீம்**

**கௌரவ (கலாநிதி) எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்**

**கௌரவ சந்திம ஹெட்டிஆரச்சி**

**கௌரவ சம்பிக ஹெட்டிஆரச்சி**

**கௌரவ தினிந்து சமன் ஹென்னாயக்க**

**கௌரவ (செல்வி) சட்டத்தரணி லக்மாலி ஹேமசந்திர**

**கௌரவ தினேஷ் ஹேமந்த**

**கௌரவ (திருமதி) சட்டத்தரணி கீதா ஹேரத்**

**கௌரவ சட்டத்தரணி பாக்ய ஸ்ரீ ஹேரத்**

**கௌரவ முஹம்மட் பைசல்**

**கௌரவ ரியாஸ் பாருக்**

திருமதி குஷானி ரோஹனதீர, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திரு. சமிந்த குலரத்ன, பதவியணிப் பிரதானி மற்றும் பாராளுமன்றப் பிரதிச் செயலாளர் நாயகம்

திரு. ஹன்ஸ அபேரத்ன, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

1. ***சபாநாயகரின் அறிவித்தல்கள்:*** சபாநாயகர் பின்வருமாறு அறிவித்தல் விடுத்தார்:—

"பிரதிநிதித்துவப் பாராளுமன்ற முறைமை காணப்படுகின்ற ஒரு நாட்டில் மக்கள் பிரதிநிதி என்ற வகையில் பாராளுமன்ற உறுப்பினரொருவரின் அடிப்படை பணிப்பொறுப்புகளில் பிரதிநிதித்துவம், சட்டம் இயற்றுதல், பகிரங்க நிதி நிர்வாகம் மற்றும் மேற்பார்வை ஆகியவை முக்கிய இடத்தை வகிப்பதோடு அவற்றில் பிரதிநிதித்துவம் எனும் செயற்பாட்டின் மூலம் ஆற்றக்கூடிய பணியானது மிகவும் தனித்துவம் வாய்ந்ததாகும்.

அதன் பிரகாரம், மக்கள் பிரதிநிதி என்ற வகையில் பிரதிநிதித்துவம் எனும் பணிப்பொறுப்பை மேற்கொள்ளும் போது பொதுமக்களுடன் தொடர்புடைய பொது விடயங்கள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பாக பாராளுமன்றத்தின் கவனத்துக்கு கொண்டு வந்து நிறைவேற்றுத்துறையின் ஊடாக தீர்வுகளைப் பெற்றுக் கொள்ளும் பல்வேறு செயன்முறைகள் காணப்படுவதோடு வாய்மூல விடைக்கான வினாக்கள், எழுத்துமூல விடைக்கான வினாக்கள், சபை ஒத்திவைப்பு வேளை வினாக்கள், சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணைகள் மற்றும் பாராளுமன்றத்தின் நிலையியற்

கட்டளையின் 27 (2) ஆம் இலக்க ஏற்பாடுகளின் பிரகாரம் 'கேள்வி நேர முடிவின்போது பொது முக்கியத்துவம் வாய்ந்த விடயமொன்று தொடர்பாக ஏற்புடைய அமைச்சருக்கு முறையாக அறிவித்ததை தொடர்ந்து பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சி தலைவரினாலோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி ஒன்றின் தலைவரினாலோ எழுப்பப்படுகின்ற வினாக்கள்' அவற்றில் முதன்மையானவை ஆகும்.

அதன் பிரகாரம், நிலையியற் கட்டளையின் 27(2) ஆம் இலக்க ஏற்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்படுகின்ற வினாக்கள் தொடர்பாக பல்வேறு சந்தர்ப்பங்களில் சபையில் எழுப்பப்பட்ட விடயங்கள் மற்றும் குறிப்பாக 2025.05.09 ஆம் திகதியன்று ஏற்பட்ட நிலைமை தொடர்பாக சபாநாயகர் என்ற வகையில் விளக்கமளிப்பதற்கும், அது தொடர்பான எனது தீர்மானத்தை இச்சபைக்கு அறிவிப்பதற்கும் விரும்புகின்றேன்.

நிலையியற் கட்டளையின் 27(2) ஆம் இலக்க பிரிவின் மூலம் வழங்கப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எதிர்கட்சித் தலைவருக்கும் கட்சித் தலைவர்களுக்கும் வழங்கப்பட்டுள்ள இச் சந்தர்ப்பத்தின் நோக்கம், அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்ததொரு விடயம் தொடர்பாக ஏற்புடைய விடயத்துக்கு பொறுப்பான அமைச்சருக்கு மேற்கொள்ளப்படுகின்ற குறுகிய கால அறிவித்தலொன்றின் மூலம் பதில்களை பெறுவதாகும். அதன் பிரகாரம், ஏற்புடைய விடயம் 'அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விடயமொன்றாக' இருக்க வேண்டியது இன்றியமையாததென்பதோடு, குறுகிய முன்னறிவித்தல் கொடுக்கப்பட்டதன் மூலம் பதிலளிப்பதற்கு ஏற்ற வகையிலான ஒன்றாகவும் அது இருக்க வேண்டியது அத்தியாவசியமாகும்.

அத்தோடு, அவ்வாறான விடயமொன்றின் உள்ளடக்கம் குறிப்பிட்டதொரு விடயத்தை அடிப்படையாக கொண்டதொரு விடயத்துக்கு மட்டுப்படுத்தப்பட்டிருக்க வேண்டுமென்பதோடு அமைச்சரொருவரின் விடயப்பரப்புக்குள் உள்ளடக்கப்படுகின்ற விடயமாக இருக்க வேண்டியதும் அத்தியாவசிய விடயமாக கருதப்படுகிறது.

நீண்டகாலமாக நடைமுறையில் இருந்து வரும் சம்பிரதாயத்தின் பிரகாரம் முந்தைய நாள் நண்பகல் 12.00 மணிக்கு முன்னதாக ஏற்புடைய விடயத்துக்கு பொறுப்பான அமைச்சருக்கு மேற்குறிப்பிட்ட வினாவை ஆற்றுப்படுத்த வேண்டியதன் நோக்கம் யாதெனில் மிகத் துரிதமாக பதில்களை பெறுவதற்கு வாய்ப்பேற்படுத்திக் கொள்வதாகும்.

இருப்பினும், பத்தாவது பாராளுமன்றத்தின் தொடக்கத்திலிருந்து தற்போது வரை மேற்படி ஏற்பாடுகளின் கீழ் கேட்கப்படும் பெரும்பாலான வினாக்கள் 'அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த' விடயங்களுக்கு புறம்பான பெருமளவிலான துணை வினாக்களைக் கொண்டிருப்பதும், மிக விரிவான தரவுகளுடன் பதில்கள் எதிர்பார்க்கப்படுவதும், அமைச்சரொருவரின் விடயப்பரப்புக்குள் மட்டுப்படுத்தப்படாமல் இருப்பதும், அத்தோடு நேரொத்த தன்மையிலான வினாக்கள் மீண்டும் மீண்டும் தொடர்ச்சியாக கேட்கப்படுவதும் அநேகமான சந்தர்ப்பங்களில் அவதானிக்கப்பட்டுள்ளது.

மேலும், நிலையியற் கட்டளைகளின் பிரகாரம், இதுபோன்ற வினாக்களுக்கு மேலதிக வினாக்களைக் கேட்பதற்கான ஏற்பாடு இல்லை என்ற போதிலும், சில விடயங்களை தெளிவுபடுத்திக்கொள்ளும் வகையில் கோரிக்கை விடுத்து, பெரும்பாலும் மேலதிக வினாக்களின் வடிவத்தில் அவை கேட்கப்படுவதையும் குறிப்பாக, வினாவை எழுப்பிய கட்சித் தலைவருக்கு மேலதிகமாக, இதர உறுப்பினர்களும் அதனோடு தொடர்பான தகவல்களை வினவுவதற்கு மற்றும் வினாக்களைக் கேட்க முயற்சிக்கும் சந்தர்ப்பங்களையும் என்னால் மேலும் அவதானிக்க முடிந்ததென்பதை அறிவிக்க விரும்புகின்றேன்.

மேலும், இவ்வாறு கேட்கப்படும் பெரும்பாலான வினாக்களை வாய்மூல விடைக்கான வினாக்கள், எழுத்துமூல விடைக்கான வினாக்கள், சபை ஒத்திவைப்பு வேளையில் முன்வைக்கப்படும் வினாக்கள் மற்றும் சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணைகள் மூலம் முன்வைக்க முடியும் என்பதையும் இத்தால் மேலும் தெரிவிக்க விரும்புகின்றேன்.

தற்போதைய இந் நிலைமை காரணமாக வினாக்களை கேட்பதற்கும், பதில்களை வழங்குவதற்கும் மற்றும் மேலதிக வினாக்களை கேட்பதற்கும் மற்றும் அவற்றுக்கான பதில்களை வழங்குவதற்கும் மிகக் கூடுதலான நேரம் விரயமாகின்றதால் இதற்காக ஒதுக்கப்பட்டுள்ள நேரத்திற்குள் அந்த விடயங்கள் முடிவுறுத்தப்படாமையினால் சபையின் அன்றாட பிரதான அலுவல்களுக்கு கடும் இடையூறுகள் ஏற்படுவதும், பிரதான அலுவல்களுடன் தொடர்புடையாக உரையாற்றவிருப்பவர்களின் நேரம் வீணடிக்கப்படுவதும் தொடர்ச்சியாக காணக்கூடியதொரு நிலைமையாகும்.

நிலையியற் கட்டளையின் 27(2) ஆம் இலக்க பிரிவின் கீழ் கேட்கப்படும் மேற்படி வினாக்கள் தொடர்பில் 2025.03.21 ஆந் திகதி நடைபெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்திலும் விரிவாக கலந்துரையாடப்பட்டு நிலையியற் கட்டளைகளின் ஏற்பாடுகள், தற்போதுள்ள சம்பிரதாயங்கள் மற்றும் சபாநாயகரின் உத்தரவுகளின் அடிப்படையில் அரசாங்கத் தரப்பினதும் எதிர் தரப்பினதும் பொது இணக்கப்பாட்டின் பேரில் இது தொடர்பான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.

இருப்பினும், குறித்த ஏற்பாடுகள் மற்றும் சம்பிரதாயங்களுக்கு உட்பட்ட வகையில் மேற்படி வினாக்கள் முன்வைக்கப்படாத காரணத்தினால் நேர முகாமைத்துவம் தொடர்பில் பல சிக்கல்கள் மேலெழுந்துள்ளதால், இதனகத்துப் பின்னர் நிலையியற் கட்டளையின் 27(2) ஆம் இலக்க பிரிவின் கீழ் கேட்கப்படும் வினாக்களை மேற்படி ஏற்பாடுகளுக்கு உட்பட்ட வகையில் மாத்திரம் சமர்ப்பிக்க வேண்டிய அவசியம் உள்ளதென்பதை இந்த சபைக்கு வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

ஆகவே, தற்போதைய இந்த நிலைமைகள் அனைத்தையும் கருத்திற் கொண்டு, இதனகத்துப் பின்னர் நிலையியற் கட்டளையின் 27(2) ஆம் இலக்க பிரிவின் கீழ் கேட்கப்படும் வினாக்களை மேற்குறிப்பிட்ட ஏற்பாடுகளுக்கமைவாக சமர்ப்பிக்குமாறு குறித்த கட்சித் தலைவர்களிடம் கோருவதோடு, மேற்படி ஏற்பாடுகளுக்கு புறம்பாக சமர்ப்பிக்கப்படும் வினாக்கள் தொடர்பாக நிலையியற் கட்டளையின் பிரகாரம் தேவைக்கேற்ப என்னால் நடவடிக்கைகளை மேற்கொள்ள நேரிடும் என்பதையும் இச்சபைக்கு மேலும் அறிவிக்க விரும்புகின்றேன்.

அதற்கமைய, இவ் வினாக்களை சமர்ப்பிக்கும் சகல கட்சித் தலைவர்களினதும் கவனத்திற்கு இவ்விடயங்கள் ஆற்றுப்படுத்தப்படுவதோடு நிலையியற் கட்டளையின் பிரகாரம் சபை நடவடிக்கைகளை எவ்வித இடையூறுமின்றி நடாத்துவதற்கு தாங்களின் பூரண ஒத்துழைப்பை நான் ஆவலுடன் எதிர்பார்க்கின்றேன்."

**2. பத்திரங்கள் சமர்ப்பித்தல்:** (1) சபாநாயகர், இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கணக்காய்வு அறிக்கையின் பத்தாவது தொகுதியினது —

(i) கறவை மாடு இறக்குமதி செயற்திட்டத்தின் மூன்றாம் கட்டத்தின் II ஆம் பகுதியின் கீழ் 15,000 கறவை மாடுகளை இறக்குமதி செய்வதற்கான முற்பணம் வழங்குதல் தொடர்பான விசேட கணக்காய்வு அறிக்கை; மற்றும்

(ii) 2024 சனவரி முதல் ஆகஸ்ட் வரையிலான காலகட்டத்தில் "இளைஞர்களை இன்னல்களிலிருந்து மீட்டெடுத்தல்" என்ற கருப்பொருளின் கீழ் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் மேற்கொள்ளப்பட்ட 6 நிகழ்ச்சித்திட்டங்களின் முறைப்படியான தன்மை, பயனுறுதி மற்றும் மன்றத்தின் முக்கிய நோக்கங்களுடன் இணங்குதல் குறித்து மேற்கொள்ளப்பட்ட விசேட கணக்காய்வு அறிக்கை

ஆகியவற்றைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கைகள் **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனவும் அச்சிடப்பட வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

(2) சபாநாயகர், இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கணக்காய்வு அறிக்கையின் எட்டாவது தொகுதியின் 'அப்பி வெனுவென் அப்பி' நிதியத்தின் செயலாற்றல் மதிப்பீடு தொடர்பான அறிக்கையினைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனவும் அச்சிடப்பட வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

(3) பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர், 2022 ஆம் ஆண்டுக்கான கொழும்புப் பல்கலைக்கழகத்தின் மனிதவள மேம்பாட்டு நிறுவகத்தின் ஆண்டறிக்கை மற்றும் வருடாந்த நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கை கல்வி, ஊழியப் படை மற்றும் மனித மூலதனம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது

(4) போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர், 2016, 2017, 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளுக்கான லக்திவ என்ஜினியரிங் (பிரைவேட்) லிமிட்டட்டின் ஆண்டறிக்கைகளைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கைகள் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மூலோபாய அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது

(5) பிரதிச் சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக பிரதி அமைச்சர், 2023 ஆம் ஆண்டுக்கான இலங்கை ஆயுள்வேத மருந்துகள் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கை சுகாதாரம், வெகுசன ஊடகம் மற்றும் மகளிர் வலுவூட்டல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது

(6) போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர், 2023/2024 ஆம் ஆண்டுக்கான வரையறுக்கப்பட்ட இலங்கை பொஸ்பேட் நிறுவனத்தின் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கை பொருளாதார அபிவிருத்தி மற்றும் சர்வதேச உறவுகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது

(7) விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சர், 2021 ஆம் ஆண்டுக்கான இலங்கை தேசிய ஆராய்ச்சி சபையின் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கை விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் பரிணாமம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது

**3. பொது மனுக்கள் சமர்ப்பித்தல்:**

(1) (i) நாகியாதெனிய, நாவல, கலிங்கவத்த எனும் முகவரியில் வதியும் திருமதி ஏ.கே. சுனீதாவினது 2025.02.26 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(ii) பத்தேகம, பத்தேகம தெற்கு, 'ஜயசங்க' எனும் முகவரியில் வதியும் திரு. கே.ஜி. பந்துபேமவினது 2025.02.10 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்; மற்றும்

(iii) பத்தேகம, மஹஹேன்கொட, கொட அரம்ப கொட எனும் முகவரியில் வதியும் திரு. எஸ்.கே.டப்ளியூ. ஜயசேகரவினது 2025.02.10 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ திலங்க யூ. கமகே சமர்ப்பித்தார்.

(2) கட்டுகஸ்தோட்ட, ஹமங்கொட வீதி, நுகேகொடவத்த, இல. 5/1/சீ இல் வதியும் திரு. ஆர்.எம். விஜேசுந்தரவினது 2025.02.10 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ (திருமதி) சட்டத்தரணி துஷாரி ஜயசிங்ஹ சமர்ப்பித்தார்

(3) குருணாகல், இந்துல்கொடகந்த எனும் முகவரியில் வதியும் திரு. ஏ.ஜி.எஸ். அபேவர்தனவினது 2024.12.01 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ சுஜீவ திசாநாயக்க சமர்ப்பித்தார்.

(4) (i) பண்டாரகம, ரம்புக்கன, இல. 83 இல் வதியும் செல்வி எச். பிரியதர்ஷனீ கீர்த்திசிங்கவினது 2025.02.18 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(ii) களுத்துறை தெற்கு, கித்துலாவ, இல. 622/02 இல் வதியும் திரு. எம்.டி. தனபாலவினது 2025.02.10 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(iii) களுத்துறை, நாகொட, அருண மாவத்தை, இல. 21/18 இல் வதியும் திரு. எம்.எஃப்.எஸ். பர்னாந்துவினது 2025.02.12 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்; மற்றும்

(iv) அலுபோமுல்ல, அருக்கொட, ரட்டியலாகொட, 'லக்சிரி', இல.422/ஏ இல் வதியும் திருமதி ஆர்.எச். சிரியலதாவினது 2025.01.27 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ நந்தன பத்மகுமார சமர்ப்பித்தார்.

(5) பண்டாரவளை, கிணிகம, ஹீல் ஓயா வீதி, ' இந்துனில், ' இல. 114/2 இல் வதியும் திரு. இந்துனில் உமேஷ் திசாநாயக்கவினது 2025.01.23 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ சுதத் பலகல்ல சமர்ப்பித்தார்.

(6) (i) கேகாலை, தேவாலேகம, உருலெதெனிய, கஹபொலேவத்த எனும் முகவரியில் வதியும் திரு. எச்.பி. ராஜபக்ஷவினது 2025.02.02 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்; மற்றும்

(ii) அலவ்வ, வெரலுகொல்லவத்த, இல. டி/143 இல் வதியும் திரு. என்.டி. கருணாரத்னவினது 2025.02.16 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ மனோஜ் ராஜபக்ஷ் சமர்ப்பித்தார்.

(7) அம்பலன்கொட, ரங்தொம்பே, கப்புஎல வீதி, இல. 29 இல் வதியும் திரு. ஜகமுனி சாமிந்த சஞ்ஜீவவினது 2024.12.03 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ (திருமதி) சட்டத்தரணி ஹசாரா லியனகே சமர்ப்பித்தார்

மேற்படி மனுக்கள் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 30(10) இன் கீழ் பொது மனுக்கள் பற்றிய குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன.

**4. நிதிச் சட்டத்தின் கீழ் கட்டளை:** பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர் சார்பாக நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— 2003 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 2(1) ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2025 சனவரி 31 ஆம் திகதிய 2421/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும், 2025.05.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(பி.ப. 10.46 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

(பி.ப. 1.00 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

"கௌரவ அஜித் கிஹான் தலைமை தாங்குவாராக" என கௌரவ முனீர் முலாபர் பிரேரிக்க அதனை கௌரவ (திருமதி) நிலூஷா லக்மாலி கமகே அனுவதித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 2.43 மணிக்கு கௌரவ அஜித் கிஹான் தலைமை தாங்கினார்.)

"கௌரவ சந்திம ஹெட்டிஆரச்சி தலைமை தாங்குவாராக" என கௌரவ சுனில் ராஜபக்ஷ பிரேரிக்க அதனை கௌரவ (திருமதி) சட்டத்தரணி ஹசாரா லியனகே அனுவதித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 4.01 மணிக்கு கௌரவ சந்திம ஹெட்டிஆரச்சி தலைமை தாங்கினார்.)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**5. *நிதிச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்:*** பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர் சார்பாக நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— 2018 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 51 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 19 ஆம் பிரிவின் கீழ் மோட்டார் வாகனங்கள் மீதான சொகுசு வரி தொடர்பில் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2025 சனவரி 31 ஆம் திகதிய 2421/41 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும், 2025.05.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**6. ஒத்திவைப்பு:** "இப்பாராளுமன்றம் இப்பொழுது ஒத்திவைக்கப்படுமாக" என பாராளுமன்றச் சபை முதல்வர் அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பாராளுமன்றம், பி.ப. 5.03 மணிக்கு தலைமை தாங்கும் உறுப்பினரால் 2025 மே 22 ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப. 9.30 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.